(4) அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவை இந்த மன்றத்தின் முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

(5) 1971-72-ம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, 1971-72-ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மீதான 5-ஆம் நாள் விவாதம்.

* திரு. துரைமுருகன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, 1971-72-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையை இம் மாமன்றத்திலே வைத்த நம்முடைய முதல்வருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, அந்த அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வறண்டு போன புள்ளி விவரங்களை மட்டும் உள்ளடக்கிய வட்டிக்கடைக்காரன் புத்தகம் போல் இல்லாமல், கன்னித் தமிழும் பக்கத்திற்குப் பக்கம் சோஷலிச கொள்கைகளைக் கொண்டு சோஷலிச முத்திரை பெற்றிருக்கின்ற ஒரு வரவு செலவுத் திட்டத்தை இந்த அவையிலே அவர் வைத்துப்பேசியதை நான் பாராட்டுகிறேன். இந்த அளவுக்கு நல்ல அம்சங்களைக் கொண்ட இந்த நிதி நிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு இந்த இடத்திலே இருக்கும் சிலருக்கு மனம் வரவில்லை என்பதை நான் வருத்தத்துடன் குறிப்பிட்டே ஆகவேண்டும். வடக்கே இருக்கின்ற பலரும், வடக்கே இருந்து வருகின்ற பல பத்திரிகைகளும் இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சரின் இந்த நிதி நிலை அறிக்கையை எடுத்து பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நான் இதைப் பாராட்டினால் கூட, "இது என்ன உங்களுடைய பட்ஜெட், அதைப் பாராட்டாமல் இருப்பீர்களா, நீங்கள் அந்தக் கட்சிக்காரர்; இப்படிப் பாராட்டுவதிலே ஒன்றும் ஆச்சரியம் இல்லை" என்று தான் சொல்வார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, தலைவர்களின் அனுமதியுடன் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1971-ம் ஆண்டு ஜூன் மாதம் 22-ம் தேதி வடக்கே இருந்து